மனனம் செய்ய இந்த வார வசனம்:

**“ஆண்டவர் அருளும் நீதியும் கொண்டவர்; நம் கடவுள் இரக்கம் உள்ளவர்”**

(திருபா:116:5)

இயேசு அவர்களுக்குக் காட்டிய முன்னுதாரணம் இன்று நம்மில் பலருக்குப் புரிவதுபோல் அவர்களுக்கு அப்போது புரிந்துகொள்ளக் கடினமாக இருந்திருக்கலாம். “ சிலுவை இல்லாமல் கிறிஸ்துவைப் பின்பற்றுவது மிகவும் எளிதாக இருக்காதா: என்றும் நாம் கேட்கலாம்.

யாக்கோபு அவருடைய பங்காக, சிலுவைக்கும் சீடருக்கும் உள்ள புள்ளியை இணைக்க உதவுகிறார். நம்பிக்கைக்கும், அதனுடைய பணிகளுக்கும் இடையில் பாலம் கட்டுவதன் முக்கியத்துவத்தை நமக்குக் கற்பிக்கிறார். “இயேசு ஆண்டவர்” என்று சொல்லிவிட்டு எந்த ஒரு செயலையும் செய்யாமல் இருக்க இயலாது. மேலும், பிறருக்கு எந்தவிதமான பயனுள்ள சேவைகளோ, அல்லது தேவைப்படுபவர்களுக்கு எந்த உதவியையும் வழங்காமல், வெறும் உதட்டால் சேவை செய்வது போதாது. சுருக்கமாக கூறுவதென்றால், விரலால் கூட எதையும் தூக்காமல் வெறும் வாய்வார்த்தைகளைப் பேசுவது. இதுபோன்ற நடத்தை, விண்ணகத்திற்குச் செல்லும் குறுகிய சாலையில் பயணிக்கும் அணுகுமுறைக்கு உதவாது.

நம் வாழ்க்கையில் இறைவன் நம்மிடம் இரகசியமாக ஒன்று கேட்கிறார் என்று தெரிகிறது. நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கும் நாம் செய்யும் செயல்களுக்கும் இடையே ஒரு சமநிலையைக் கண்டறிவது., வீட்டிலும், பணியிடங்களிலும், நண்பர்கள் மற்றும் அவ்வளவாக நட்போடு இல்லாதவர்களிடத்திலும் கூட நாம் நம்முடைய நம்பிக்கையை எடுத்துரைக்க வேண்டும். இன்னும் நமக்கு அறிமுகமில்லாத அந்நியரிடத்திலும் எடுத்துரைக்க வேண்டும்.

கடினமான தருணங்களில் கூட இயேசுவைப் போல நம்முடைய முகங்களைக் கற்பாறையைப் போல உறுதியாக வைத்து சூழ்நிலைகளை எதிர்கொண்டோமானால், இயேசு தரும் வெகுமதி நமக்கு நிச்சயம் உண்டு. இந்த குணம் நமக்கு வரவேண்டுமென்றால், ஒரு கையில் நம்பிக்கையும், மறு கையில் அதற்கானப் பணியையும் நாம்மேற்கொள்ள வேண்டும். இதை நாம் சமமாகக் கையாள்வதற்கு உண்மையான இறைவேண்டலும், ஆண்டவரின் மீது ஆழமான அன்பும் கொண்டிருக்க வேண்டும். “ நம் சிலுவையை நாமே தூக்கிக்கொண்டு எல்லா நேரத்திலும் அவர் பின்னே செல்வது” தான் நாம் இதற்குக் கொடுக்கும் விலை.

இறுதியில் உண்மையான சீடனுக்கு கொடுக்கப்படும் சோதனை இது தான்.

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 50: 5-9;
திருப்பாடல்: 116: 1-6, 8-9;
யாக்கோபு: 2: 14-18;
மாற்கு: 8: 27-35.

INTERNAL CIRCULATION ONLY
BUL 37/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

12 செப்டம்பர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 24 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **அனைத்துலகும் ஆண்டவரைப் போற்றுக!**

## உங்கள் முகங்களைக் கற்பாறையைப் போல் அமைத்துக்கொள்ளுங்கள்

இயேசு தம்முடைய சீடர்களுக்கு ஒரு கடினமான தேர்வை முன் வைக்கிறார். “ஏனெனில், தம் உயிரைக்காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார்; என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வார்” என்று கூறுகிறார். இயேசுவின் இந்தக் கூற்றால் சீடர்கள் ஒருகணம் பின்னோக்கித் தள்ளப்படுகின்றனர். சீடத்துவத்தின் பரிசு, அவரவர் சிலுவையைத் தூக்கிக்கொண்டு பின் செல்வது. ஆண்டவரை அவர்கள் அறிந்துள்ளதால், விண்ணகம் செல்வது மிகவும் எளிதாய் இருக்கும் என்று அவர்கள் எண்ணியிருப்பர்.



Image: ©123rf.com